மீண்டும் ஏதாவது ஆலோசனை செய்யப்பட்டு எந்தெந்த பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்ற முடிவிற்கு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆலோசனைக் கமிட்டியில் நடந்த விவரங்கள் கனம் அங்கத்தினருக்கு நேரடியாகத் தெரியும். அதனால் புதிதாக நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. எந்தெந்த பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்பது ஏப்ரல் 1-ம் தேதி பிரசுரிக்கப் போகிற எக்ஸ்ஸெம்ஷன் லிஸ்டில் வெளியாகும்.

Sri Arapleeswarar temple at Kollimalai

* 998 *Q*.—SRI M. R. KANDASWAMI MUDALIYAR : *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—*

(அ) *சேலம் ஜில்லா, கொல்லிமலையில் இருக்கும் அரப்பளீஸ்வரர் ஆலயத்தில் யாத்ரீகர் தங்குவதற்கு ஏதேனும் இடவசதி செய்து தர ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?*

(ஆ) *அந்த ஆலயத்தின் வருமானம் எந்த முறையில் வசூல் செய்கிறார்கள் ? எந்த முறையில் செலவு செய்கிறார்கள் ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) The income of the temple is derived from about 25 acres of land and from kanikkai realized during Adi Festival and is utilized for the maintenance of the temple.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த அரப்பளீஸ்வரர் ஆலயமானது, பாடல் பெற்ற, புகழ்பெற்ற ஒரு ஸ்தலமாகும். அங்கு மாசி மாதம் சிவராத்திரிக்கு ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் வெளியிலிருந்து வருகிறார்கள். அங்கு மலேரியா இருப்பதாலும் அவர்களுக்கு மேலேயிருந்து கீழே வந்து போக ரோடு வசதியோ, வாகன வசதியோ இல்லாதிருப்பதாலும், அங்கேயே யாத்திரீகர்கள் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்சவ காலங்களில் தற்காலிகமாக பந்தல்கள், கொட்டகைகள் போடப்படுகிறது. அங்கு நிரந்தரமாக கட்டிடங்கள் கட்ட நிதி வசதி இல்லை.

Salt factories

* 999 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of places where Salt Factories are working on Co-operative basis; and

(*b*) the aid they get from the Co-operative department?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Salt Co-operative Societies are working at eight places in this State.

(*b*) They are given such aid as are necessary by way of services of departmental officers, loans, assignment of lands, etc., on the merits of each case.

26th March 1959]

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த உப்பளங்கள் தொழிலாளர்கள் கோவாப்பரேடிவ்வாக நடத்தப்படுகிறதா? அல்லது ஒரு சில முதலாளிகளாக கூட்டுறவு சேர்த்து நடத்துகிறார்களா? இந்த உப்பளங்களில் மொத்தம் எவ்வளவு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் ஏழு சொசைட்டிகள் தொழிலாளர்கள் சொசைட்டிகள்; எட்டாவது சொசைட்டி லைசென்ஸ்ட் கோவாப்பரேடிவ் சொசைட்டி, வேதாரண்யம். இதில் ஐந்து சொசைட்டிகள்தான் இப்போது வேலை செய்து கொண்டிருக்கின்றன. பாக்கி மூன்று சொசைட்டிகளுக்கு லான்ட் அசைன்மென்ட் இன்னும் ஆகவில்லை. எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்பதற்கு என்னிடம் இப்போது தகவலில்லை.

SRI R. SRINIVASA IYER : Is this State self-sufficient in salt? Is there any proposal to re-open the salt factories closed recently?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a fluctuating trade and people are not very keen on coming to it. There is no prohibition to people coming into this trade and starting salt factories. Only they will have to have the necessary land and all that.

Road facilities for Siruthalaikadu village

* 1001 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைபூண்டி தாலூகா, வேதாரண்யம் வட்டம், சிறுதலைக்காடு கிராமத்திலிருந்து ரோடு வசதி கேட்டு மகஜர் வந்துள்ளதா?

(ஆ) அது சம்பந்தமாக இலாகா அதிகாரிகளிடமிருந்து ஏதேனும் ரிப்போர்ட் வந்துள்ளதா?

(இ) வந்திருந்தால், அதன் விபரமென்ன? அரசாங்கம் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) The work is not included in any of the approved programmes. The rough cost of the proposed formation of the road will be about Rs. 15,000. In view of the cost involved, the work cannot be taken up now and it can be considered only in connection with Third Five-Year Plan.

SRI A. VEDARATHNAM : இந்தக் கிராமத்தை கனம் அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் நேரில் வந்து பார்த்திருக்கிறார்கள். காலத்தில் கடல் ஜலம் சூழ்ந்து கொண்டு விடுகிறது. மழை காலத்தில் மழை ஜலம் சூழ்ந்து கொண்டு விடுகிறது. அது, ஒரு தீவு போலிருக்கிறது. அந்தக் கிராமத்தார் எந்தக் காரியத்திற்காகவும் வெளியே போகவேண்டுமானால் போட்டுகளில் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது முயற்சி செய்ய முன்வருமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்தக் கிராமத்தை நான் நேரடியாகப் பார்த்து அதிலுள்ள கஷ்டங்களை உணர்ந்திருக்கிறேன். ஆனால் இப்பொழுதிருக்கும் நிதி நிலைமையால் அதை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு முடியவில்லை. நிதி நிலையைப் பொறுத்து அதில் எவ்வளவு கவனம் செலுத்த முடியுமோ அதற்குத் தகுந்தாற்போல் செய்யப்படும்.